**த. நா.ச.பே. எண் : 006** **நாள் :30.03.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று **(30.3.2015)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், எதிர்வரும் கோடை காலத்தை முன்னிட்டு குடிநீர் தட்டுப்பாடில்லாமல் வழங்கிட எடுக்கப்பட்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஆற்றிய உரை:-

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வறட்சியை எதிர்நோக்கி சில மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. சில விளக்கங்களை இந்த அவையிலே கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் சராசரி மழை அளவு 920.09 மி.மீ ஆகும். 2014 – ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு 906.09 மி.மீ மழை கிடைக்கப் பெற்றுள்ளது. இது சாதாரண மழை அளவைவிட 2 சதவீதம் குறைவானதாகும்.

2014 – ஆம் ஆண்டு தமிழகத்தில் 9 மாவட்டங்களில் சராசரிக்கும் குறைவான மழையும், 18 மாவட்டங்களில் போதுமான மழையும் 5 மாவட்டங்களில் அதிக மழையும் கிடைக்கப் பெற்றது.

2014 – ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையில் மாநிலத்திற்கு போதுமான (–2 %) மழை கிடைத்த போதிலும் கீழ்கண்ட 8 மாவட்டங்களில் குறைவான மழையே கிடைக்கப் பெற்றுள்ளது.

| **வ. எண்** | **மாவட்டம்** | **சாதாரண மழை அளவு மி.மீ.–இல்** | **கிடைக்கப் பெற்ற மழை அளவு மி.மீ.–இல்** | **வித்தியாசம் (சதவீதத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | வேலூர் | 348.7 | 183.5 | -47% |
| 2 | திருவண்ணாமலை | 446.5 | 248.8 | -44% |
| 3 | அரியலூர் | 545.5 | 360.9 | -34% |
| 4 | திருச்சிராப்பள்ளி | 391.5 | 259.1 | -34% |
| 5 | காஞ்சிபுரம் | 641.8 | 438.2 | -32% |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | விருதுநகர் | 419.0 | 308.1 | -26% |
| 7 | மதுரை | 419.1 | 323.4 | -23% |
| 8 | பெரம்பலூர் | 440.9 | 346.0 | -22% |

எதிர்வரும் கோடை காலத்தில் எதிர்பார்க்கப்படும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் தேவை நிலையை ஆய்வு செய்யுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசால் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் குடிநீர் தேவையினை ஆய்வு செய்து, குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள துறை ரீதியான நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

11.03.2015 அன்று குடிநீர் பற்றாகுறையினை சமாளிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ய, தலைமைச் செயலர் அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தின் போது, கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சம்மந்தப்பட்ட துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக வேலூர் மாநகரம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் சென்னை மாநகரத்தில் குடிநீர் பற்றாகுறை ஏற்பட வாய்ப்பு உள்ளது என கண்டயறிப்பட்டது. அவ்வாறே சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம், நகராட்சி நிர்வாக துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பேரூராட்சி நிர்வாக துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை போன்ற துறைகளின் தலைவர்களும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிப்பதற்காகவும், வறட்சியை சமாளிப்பதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரினர். அவ்வாறே, மாவட்ட ஆட்சியர்கள் மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க உரிய நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளனர். குடிநீர் பற்றாகுறையினை சமாளிப்பதற்காக துறை ரீதீயான திட்ட ஒதுக்கீடு மற்றும் அவசர கால நிதியினை தவிர்த்து கூடுதலாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளனர்.

**மாவட்டங்களில் மேற்கொள்ளபடும் பணிகளின் விவரம்:**

- ❖ ஆழ்துளை கிணறுகள் அமைத்தல்
- ❖ குடிநீர் ஆதாரங்கள் மேம்படுத்தல்
- ❖ புனரமைப்பு பணிகள்
- ❖ லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல்

- ❖ சின்டெக்ஸ் டேங்குகள் அமைத்தல்
- ❖ குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல்
- ❖ சிறு மின்விசை பம்பு அமைத்தல்
- ❖ கை பம்புகள் அமைத்தல்

16.03.2015 அன்று குடிநீர் வழங்கல் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டு, துறை தலைவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய நிதி ஒதுக்கீடு வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அரசாணை எண். 139, வருவாய் துறை, நாள் **21.03.2015** வாயிலாக அரசு கீழ்க்கண்டுள்ளவாறு துறை தலைவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல் பணிகளுக்கென மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை விவரம்:**

| வ. எண் | மாவட்டங்கள் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | வேலூர்<br>(இதில் ரூ. 5 கோடி வேலூர் மாநகராட்சிக்காக மட்டும்) | 20.00 |
| 2. | திருவண்ணாமலை | 10.00 |
| 3. | காஞ்சிபுரம் | 5.00 |
| 4. | திருச்சிராப்பள்ளி | 5.00 |
| 5. | விருதுநகர் | 5.00 |
| 6. | மதுரை | 5.00 |
| 7. | பெரம்பலூர் | 3.00 |
| 8. | அரியலூர் | 2.00 |
| 9. | மீதமுள்ள 23 மாவட்டங்களுக்கு மாவட்டம் 1–க்கு ரூ. 50 லட்சம் வீதத்தில் | 11.50 |
| | **மொத்தம்** | **66.50** |

**இதுபோல குடிநீர் வழங்கல் பணிகளுக்கென துறை தலைமை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை விவரம்**

| வ. எண் | துறைகள் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | 10.00 |
| 2. | நகராட்சி நிர்வாக துறை | 10.00 |
| 3. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 5.00 |
| 4. | பேரூராட்சி நிர்வாக துறை | 3.00 |
| 5. | கால்நடை பராமரிப்பு துறை | 1.00 |
| | **ஆக மொத்தம்** | **29.00** |

மாநில அரசின் இந்நடவடிக்கையானது எதிர்வரும் கோடை காலத்தில் பொது மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**